முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1020

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.07.2022, வெள்ளிக்கிழமை

1. கருணைக் கடலாய் வந்த குருவே
   கலியுகத்தை மீட்கும் சக்தியாய் அருளும் குருவே
   ஆறுமுகன் என் அவதாரமாக வந்த
   அண்ணலே அரங்கமகா ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆனி மாதம் 31 நாள், 15.07.2022 வெள்ளிக்கிழமை)
   வானவர்கள் போற்றும் மாதர்மத்தை
   வாரி வழங்கி வள்ளலாக கலியில் அற்புதம் நடத்தும்
3. நடத்துகின்ற அரங்கனே உன் தர்மமே உலகை மீட்கும்
   ஞானமெனும் உன் சன்மார்க்கமே உலகோரைக் காக்கும்
   காக்கும் மகா சக்தியாக கருணைபட இயங்குகின்ற கலியின் அவதார ஞானியே
   ஆக்கமுடன் உன் தர்மமும் சன்மார்க்கமும் அகிலத்தை முழுமைபட ஆளும்காலம் வர இருக்க
4. இருக்கவே கலியுக மக்களெல்லாம்
   இணைந்து அரங்கன் திருவடி பற்றி
   கருத்தாக ஞானம் பயில
   கட்டாயம் தர்மத்தை செய்து வர
5. வருகவே உலக மாற்றம்
   வல்லமைபட அரங்கனால் நடக்கும்
   தருகின்ற உயர் குணங்கள் உலகில் பெருகி
   தரணியோர்க்கு ஞானம் சித்திக்கும்
6. சித்திக்கவே அரங்கனுள் சித்திகளைக் கூட்டி
   சித்தமுமாக சர்வ சூட்சுமமுமாக ஆறுமுகன் யான்
   நத்தியே பல அற்புதங்கள் நடத்திவர
   நம்பிக்கை கொண்டு அரங்கன் வழிவர உலகம் மாற்றம் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–